THE HINDU - ENGLISH
Dated: 30.01.2025

# Haryana files case against Kejriwal over Yamuna row

**The Hindu Bureau**
CHANDIGARH

Amid the row surrounding the Yamuna river, the Haryana government on Wednesday lodged a case against Aam Aadmi Party supremo Arvind Kejriwal for accusing it of "poisoning" Delhi's water supply.

Haryana Minister Vipul Goel said the BJP government had taken strong cognisance of Mr. Kejriwal's statement regarding water supply, and has filed a case against him in the Sonipat court under the Disaster Management Act.


He termed Mr. Kejriwal's statement absurd and misleading, and urged the Election Commission to take strict cognisance of the statements.

Mr. Kejriwal, responding to the EC's notice, said his statement was "fully protected under the constitutional guarantee of freedom of speech and expression, and no offence or any violation of Code of Conduct was committed".

DECCAN CHRONICLE

Dated: 30.01.2025

## GEARING UP





Insertion of party symbols, names and photos of candidates on ballot units that will be used in polling stations for the byelections to Erode East Assembly constituency, scheduled for February 5, begins on Tuesday, amid tight security.

*—Zakeer Hussain*

DECCAN CHRONICLE
Dated: 30.01.2025

## WATER HIGHLY CONTAMINATED, KEJRIWAL TELLS EC

New Delhi, Jan. 29: AAP chief Arvind Kejriwal on Wednesday responded to the Election Commission notice over his claim that Haryana government was "mixing poison" in Yamuna, and said raw water received from the state recently has been "highly contaminated and extremely poisonous" for human health.

Full report P7

■ Water from Yamuna tested, no poison found: Haryana CM

# Yamuna row: Haryana books Kejriwal, CM Saini sips water

DC CORRESPONDENT
NEW DELHI, JAN. 29

The Yamuna ammonia controversy has emerged as a critical point of contention ahead of the February 5 Delhi Assembly polls with the Haryana government on Wednesday filing a case against AAP chief Arvind Kejriwal and also moving the court over his statement that Haryana was mixing "poison" in the Yamuna water coming to Delhi.

In a new twist to the ongoing row, Haryana chief minister Nayab Singh Saini took a sip of water from the Yamuna banks at Palla ghat in Dahisara village, the last point in Haryana, after which the river enters Delhi.

Mr Saini said, "An unfortunate statement by Mr Kejriwal was made to create fear in the minds of people for his political benefits. Today, I came here to the banks of river Yamuna and took a sip of the water from Yamuna."

Accusing Mr Kejriwal of having lied "all his life," Mr Saini claimed that water from the Yamuna was sent for testing and no poison was found.



AAP national convenor Arvind Kejriwal addresses a public meeting in New Delhi. — PTI

**MR SAINI'S Cabinet colleague, Vipul Goel, said the government has filed a case in the Sonipat chief judicial magistrate court under the Disaster Management Act over AAP chief's statement**

The Haryana CM had said Mr Kejriwal should seek an apology from the public of Haryana and Delhi.

"Kejriwal has lost his mental balance seeing his possible defeat in the elections. He should seek an apology from the public of Delhi and Haryana immediately, or we will file a defamation suit against him. Kejriwal has insulted the land where he was born," he said.

Mr Saini's Cabinet colleague, Vipul Goel, said the government has filed a case in the Sonipat chief judicial magistrate court under the Disaster Management Act over the AAP chief's statement.

The revenue and disaster management minister said the water supplied to Delhi is the same water consumed by the President, Prime Minister, and Union ministers. He accused Mr Kejriwal of spreading fear among the people of not only Delhi but also Haryana with his false claims.

Section 2(D) of the act defines a disaster, while Section 54 deals with the punishment for creating a false alarm or warning about a disaster.

"Whoever makes or circulates a false alarm or warning as to disaster or its severity or magnitude, leading to panic, shall on conviction, be punishable with imprisonment which may extend to one year or with fine," Section 54 of the act states.

Notably, the Election Commission (EC) has sought proof from Mr Kejriwal of his claim.

The poll body has asked the former chief minister to submit his response by 8.00 pm on Wednesday.

DECCAN CHRONICLE
Dated: 30.01.2025

LETTERS

## WASTE OF MONEY, ENERGY, TIME

The second Erode East by election is a colossal waste of money, energy and time and the MLA will just be a dummy in the ruling group. There is nothing that he can do for his constituency till the 2026 general election. The Election Commission or Parliament, whichever is empowered, should change the relevant Act in this regard and decide once for all that there should be no byelection for whatever reason from village panchayat to Parliament. The BJP Government that is keen to bring ONOE can also take effort to implement the above change as it will result in very huge savings in terms of money, manpower and time.

B.S.Jayaraman
Coimbatore.

TIMES OF INDIA


Dated: 30.01.2025

# Wakf, ONOE bills among 62 likely in Budget sitting

Dipak.Dash@timesofindia.com

New Delhi: Govt is likely to table 62 bills for introduction and passage in the coming budget session of Parliament. The proposed legislations include Immigration and Foreigners Bill, Official Secrets Bill, PMLA Amendment Bill, Parliament (Prevention and Disqualification) Bill, Banking and Insurance Amendment Bills, Registration of Marriage of NRIs Bill, and Higher Education Commission Bill.

As expected, Wakf Amendment and One Nation One Election bills are also set to be tabled during the session. The parliamentary affairs ministry has communicated about the proposed bills to be tabled as a part of govt's legislative business to all ministries concerned so that they can take their proposed bills to cabinet for approval.



**TO BE TABLED:** The govt is eyeing amendments to the Corporate Laws Bill and Partnership Bill

At present, India has several laws that govern the entry, stay, and exit of foreigners, including the Foreigners Act, 1946, the Passport (Entry into India) Act, 1920, and the Registration of Foreigners Act, 1939.

Similarly, the proposed amendment to the Motor Vehicle Act, National Highway Act and Digital Vishwavidyalaya Bill are also in the list of 62 bills.

DAILY THANTHI
Dated: 30.01.2025

# வாக்குப்பதிவு எந்திரங்களில் சின்னம் பொருத்தும் பணி



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் வேட்பாளர்கள் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி நேற்று நடந்தபோது எடுத்த படம்.

DAILY THANTHI

Dated: 30.01.2025

# கோர்ட்டு செய்திகள்



ஈரோடு இடைத்தேர்தலில் முறைகேடுகளை தடுக்க

## வெளியூர்காரர்களுக்கு இ-பாஸ் முறையை அமல்படுத்தக்கோரி வழக்கு

சென்னை, ஜன.30-

கொங்கு தேச மறுமலர்ச்சி மக்கள் கட்சியைச் சேர்ந்த ராஜா என்பவர் சென்னை ஐ கோர்ட்டில் ஒரு வழக்கு தொடர்ந்து உள்ளார். அதில் கூறியிருப்பதாவது:-

ஈரோடு கிழக்கு முந்தைய இடைத்தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனை வெற்றிபெற செய்வதற்காக ஆளும் கட்சியினர் கடுமையாக உழைத்தனர். அந்த வகையில், ஒவ்வொரு வார்டிலும், கொட்டகைகள் அமைத்து, அதில் வாக்காளர்கள் தங்கவைக்கப்பட்டனர். அவர்களுக்கு 3 வேளையும் சாப்பாடு, பணம் உள்ளிட்டவை வழங்கப்பட்டது. தற்போது நடைபெறும் இடைத்தேர்தலிலும், கொட்டகை அமைக்கப்பட்டு, முன்பை போலவே வாக்காளர்கள் தங்கவைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு சாப்பாடு உள்ளிட்ட அனைத்தும் வழங்கப்படுகிறது.

இதை தடுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும். மேலும், ஈரோடு கிழக்கு தொகுதிக்குள் வரும் வெளியூர் நபர்களுக்கும், வெளியூர் செல்லும் தொகுதி வாக்காளர்களுக்கும் இ-பாஸ் நடைமுறையை அமல்படுத்தவும், தேர்தல் முறைகேடுகள் குறித்து புகார் அளிக்க ஆன்லைன் வசதிகளை செய்து கொடுக்கவும், தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறியிருந்தார்.

DAILY THANTHI

Dated: 30.01.2025

நெல்லை ரெயிலில் ரூ.4 கோடி சிக்கிய விவகாரம்:

# புதுச்சேரி பா.ஜனதா எம்.பி.யிடம் சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணை

சென்னை, ஜன.30-
நெல்லை எக்ஸ்பிரஸ் ரெயிலில் ரூ.4 கோடி சிக்கியது தொடர்பாக, புதுச்சேரி பா.ஜனதா எம்.பி. செல்வகணபதியிடம் சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணை நடத்தி உள்ளனர்.

## ரூ.4 கோடி பறிமுதல் வழக்கு

கடந்த நாடாளுமன்ற தேர்தலின்போது, பணப்பட்டுவாடாவை தடுப்பதற்கு தேர்தல் பறக்கும் படை களத்தில் இறங்கியது.

அப்போது சென்னை-நெல்லை எக்ஸ்பிரஸ் ரெயிலில் ரூ.4 கோடி கொண்டு செல்லப்பட்ட தகவல் அறிந்து, தாம்பரம் ரெயில் நிலையத்தில் அந்த ரெயிலை நிறுத்தி சோதனை நடத்தினார்கள்.

இந்த சோதனையில் சிக்கிய கணக்கில் வராத ரூ.4 கோடியை பறிமுதல் செய்தனர். இந்த பணத்தை எடுத்து வந்த 3 பேரை தாம்பரம் போலீசார் கைது செய்தனர். விசாரணையில் அந்த பணம் நெல்லை நாடாளுமன்ற தொகுதியில் பா.ஜனதா வேட்பாளராக போட்டியிட்ட நயினார் நாகேந்திரனுக்கு சொந்தமானது என்ற தகவல் வெளியானது. இதைத் தொடர்ந்து இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி. போலீசார் வசம் ஒப்படைக்கப்பட்டது.

## 10 மணி நேரம் விசாரணை

இதனையடுத்து இது தொடர்பாக நயினார் நாகேந்திரன், பா.ஜனதா அமைப்பு பொதுச்செயலாளர் கேசவ விநாயகம் உள்பட 25 பேரை சி.பி.சி.ஐ.டி. போலீசார் தங்கள் விசாரணை வளையத்துக்குள் கொண்டு வந்தனர்.

சம்மன் அனுப்பியும் விசாரணை நடத்தினார்கள். இந்த வழக்கு தொடர்பான விசாரணைக்கு ஆஜர் ஆகுமாறு புதுச்சேரி பா.ஜனதா தலைவரும், எம்.பி.யுமான செல்வகணபதிக்கு சென்னை சி.பி.சி.ஐ.டி. போலீசார் கடந்த அக்டோபர் மாதம் சம்மன் அனுப்பி இருந்தனர். அப்போது அவர் 3 மாதம் அவகாசம் கேட்டிருந்தார்.

அவகாசம் முடிவடைந்த நிலையில், சென்னை எழும்பூரில் உள்ள சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு ஆஜராகி உள்ளார். அவர் ஆஜரான தகவல் வெளியே கசியாமல் இருந்துள்ளது. அவரிடம் சி.பி.சி.ஐ.டி. போலீசார் 10 மணி நேரம் விசாரணை நடத்தி உள்ளனர். விசாரணைக்கு பின்னர் மீண்டும் அழைத்தால் ஆஜராக வேண்டும் என்ற நிபந்தனையுடன் சி.பி.சி.ஐ.டி. போலீசார் அனுப்பி வைத்ததாக கூறப்படுகிறது.

DINAMALAR
Dated: 30.01.2025

# கொட்டகை அமைத்து வாக்காளர்கள் தங்க வைப்பு தேர்தல் கமிஷன் பதில் அளிக்க ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜன. 30–

ஈரோடு கிழக்கு சட்டசபை தொகுதி இடைத்தேர்தலில், செல்வாக்கான கட்சிகள் கொட்டகை அமைத்து, வாக்காளர்களை தங்க வைப்பதை தடுக்கக் கோரிய மனுவுக்கு, தேர்தல் கமிஷன் பதில் அளிக்க, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஈரோடு கிழக்கு சட்டசபை தொகுதிக்கு, பிப்.5 இடைத்தேர்தல் நடக்க உள்ளது.

தொகுதியில் உள்ள வாக்காளர்களை, முக்கிய அரசியல் கட்சிகள், கொட்டகை அமைத்து தங்க வைப்பதை தடுக்க, தேர்தல் கமிஷனுக்கு உத்தரவிடக் கோரி, கொங்குதேச மறுமலர்ச்சி மக்கள் கட்சியை சேர்ந்த கே.பி.எம்.ராஜா என்பவர், சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

**வேட்பாளர்கள் தோல்வி**

அந்த மனு விபரம்:

கடந்த 2023ம் ஆண்டு, இதே தொகுதியில் நடத்தப்பட்ட இடைத்தேர்தலில், ஆளுங் கட்சி கூட்டணி சார்பில், காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்ட, ஈ.வி.கே.எஸ். இளங்கோவனை வெற்றி பெற வைக்க, ஒவ்வொரு வார்டிலும் கொட்டகைகள் அமைத்து, அதில் வாக்காளர்கள் தங்க வைக்கப்பட்டனர்.

இதன் காரணமாக, மற்ற வேட்பாளர்கள், வாக்காளர்களை எளிதாக அணுக முடியவில்லை.

கொட்டகைகளில் தங்கும் வாக்காளர்களுக்கு, பணம், உணவு உள்ளிட்டவை, தடையின்றி வழங்கப்பட்டது. இதனால், அந்த தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தோல்வி அடைய நேரிட்டது.

தற்போது நடக்க உள்ள இடைத்தேர்தலிலும், கொட்டகை அமைத்து, பழைய பாணியில் வாக்காளர்களை கவர, ஆளுங் கட்சி திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது. இதை தடுக்க நடவடிக்கை எடுக்கும்படி, தேர்தல் கமிஷனிடம் மனு அளித்துள்ளேன்.

தொகுதிக்குள் வரும் வெளிநபர்களுக்கும், வெளியூர் செல்லும் தொகுதி வாக்காளர்களுக்கும், இ – பாஸ் நடைமுறையை அமல்படுத்த வேண்டும். தேர்தல் முறைகேடுகள் குறித்து புகார் அளிக்க, ஆன்லைன் வசதி ஏற்படுத்த வேண்டும்.

கொட்டகை யுக்தியை தடுக்க கோரி, ஜன.,8ல் அளித்த மனுவுக்கு, தேர்தல் கமிஷன் இதுவரை பதில் அளிக்கவில்லை. எனவே, அதை பரிசீலித்து நடவடிக்கை எடுக்க, தேர்தல் கமிஷனுக்கு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**நீதிபதிகள் கேள்வி**

இம்மனு, நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், சி.குமரப்பன் அடங்கிய அமர்வு முன், நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, வாக்காளர்களை கவர கொட்டகை அமைக்கின்றனர் என்றால், அந்த கொட்டகைக்கு வாக்காளர்கள் எதற்காக செல்ல வேண்டும்; வாக்காளர்களுக்கு யார் தான் இலவசங்களை வழங்கவில்லை என, நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

அத்துடன், குறைந்த ஊதியம் வாங்குவோர் பஸ்சில் பணம் கொடுத்தும், அதிக ஊதியம் வாங்கும் மகளிர், இலவசமாகவும் பயணிக்கின்றனர்.

இது தான் ஜனநாயகம் என, சமூக வலைதளங்களில் வீடியோ வெளியானதாக கருத்து தெரிவித்து, இம்மனுவுக்கு தேர்தல் கமிஷன் பதில் அளிக்க உத்தரவிட்டு, விசாரணையை தள்ளி வைத்தனர்.

DHINAKARAN

Dated: 30.01.2025

ஈரோடு இடைத்தேர்தல் பொதுக்கூட்டத்தில்

# வெடிகுண்டு வீசுவேன் என சீமான் சர்ச்சை பேச்சு

ஈரோடு, ஜன. 30: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி, நடந்த பொதுக்கூட்டத்தில், நாதக ஒருங்கிணைப்பாளர் சீமான், வெடிகுண்டை வீசி விடுவேன் என பேசியிருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது.

நாதக ஒருங்கிணைப்பாளர் சீமான், தந்தை பெரியார் குறித்து சமீபத்தில் அவதூறாகவும், சர்ச்சைக்குரிய வகையிலும் பேசி வருகிறார். சீமானை கண்டித்து, தமிழ்நாடு முழுவதும் திராவிடர் கழகம் உள்ளிட்ட பெரியாரிய அமைப்புகள் பல்வேறு போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடத்தி வருகின்றனர். மேலும், பெரியாரிய அமைப்புகள் கொடுத்த புகாரின் அடிப்படையில், தமிழ்நாடு முழுவதும் 70க்கும் மேற்பட்ட வழக்குகள் சீமான் மீது காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தலையொட்டி, பல்வேறு நிபந்தனைகள் அடிப்படையில், நாம் தமிழர் கட்சிக்கு பிரசாரம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், சீமானும், அக்கட்சி நிர்வாகிகளும், தொடர்ந்து தந்தை பெரியாரையும், திராவிட இயக்கத்தையும் இழிவுபடுத்தும் வகையில் பேசி வருகின்றனர். இடைத்தேர்தலையொட்டி, நாதக சார்பில், அசோகபுரம் நெரிக்கல் மேட்டில் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதில், சீமான் பேசுகையில், "உன் பெரியாரிடம் வெங்காயம்தான் உள்ளது. என்னிடம் வெடிகுண்டு உள்ளது. நீ வெங்காயத்தை வீசு. நான் வெடிகுண்டை வீசுகிறேன். நான் வெடிகுண்டு வைத்திருக்கிறேன். இன்னும் வீசவில்லை. நான் வெடிகுண்டு வீசினால், உன்னை புதைத்த இடத்தில் புல் கூட முளைக்காது" என்று பேசினார்.

இடைத்தேர்தலையொட்டி நடந்த பொதுக்கூட்டத்தில் சீமான் இப்படி பேசி இருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.



எனவே, விவகாரம் குறித்து சீமான் மீது தேர்தல் ஆணையம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பெரியாரிய அமைப்புகள், காங்கிரஸ் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

## தேர்தல் விதி மீறல் சீமான் மீது வழக்கு

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் நாதக வேட்பாளர் சீதாலட்சுமி மீது, தேர்தல் விதிகளை மீறியும், அனுமதி பெறாமல் பிரசாரம் செய்ததாகவும் ஏற்கனவே 10க்கும் மேற்பட்ட வழக்குகளை போலீசார் பதிவு செய்துள்ளனர்.

இந்நிலையில், ஈரோடு நெரிக்கல்மேட்டில் நேற்று முன்தினம் மாலை நாதக வேட்பாளர் சீதாலட்சுமியை ஆதரித்து மாலை 5.30 மணி முதல் 6.30 மணி வரை பொதுக்கூட்டம் நடத்திட அனுமதி பெற்றிருந்தனர். ஆனால், தேர்தல் விதிகளை மீறி அனுமதிக்கப்பட்ட நேரத்தை தவிர்த்து, மாலை 6.15 மணிக்கு பொதுக்கூட்டத்தை தொடங்கி இரவு 9.15 மணி வரை நடத்தினர். இது குறித்து தேர்தல் பறக்கும்படை அதிகாரி நவீன் புகாரின்படி ஈரோடு கருங்கல்பாளையம் போலீசார், தேர்தல் விதிகளை மீறியதாக சீமான் உள்பட 10 பேர் மீது வழக்குப்பதிவு செய்துள்ளனர்.